02.04.2024 OS.51/2020 PW1 Name :.ரவி

குறுக்கு விசாரணை

1. நான் 2 அயிட்ட சொத்துகளுக்காக வழக்கு போட்டுள்ளேன். என்னுடைய தாயார் உயிருடன் இருந்தவரை வீடு, சொத்து சம்மந்தமான ஆவணத்தை படித்து பார்க்கவில்லை. சுமார் 6 ஆண்டுகளுக்கு முன் என் தாயார் இறந்துவிட்டார். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதில் பற்றி ஓரளவிற்கு தெரியும். இதே நீதிமன்றத்தில் அ. வ. எண். 173/2020 என்ற வழக்கை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளது பற்றி எனக்கு தெரியும். அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்னென்ன ஆவணங்களை போட்டுள்ளார் என்பது எனக்கு தெரியாது.
2. அந்த வழக்கில் என் தரப்பில் என்ன பதில் போடபட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் சொத்து 1ம் பிரதிவாதியுடையது என கூறி அவர் வழக்கு போட்டுள்ளார். 1988 ல் 1ம் பிரதிவாதி என்ன சொத்து வாங்கினார் என்பது எனக்கு தெரியாது. அந்த சொத்தை யார் யாருக்கு அவர் விற்றார் என்பது எனக்கு தெரியாது. அதன் மூலமாக எவ்வளவு வருமானம் வந்தது என்ற விவரமும் எனக்கு தெரியாது. அந்த வருமானத்தை கொண்டு தான் 1992 ல் அவர் சொத்து கிரையம் வாங்கினார் என்பது எனக்கு தெரியாது. என் தாயார் பெயர் கிளியம்மாள்.
3. அவர் இறந்து 11 ஆண்டுகள் ஆனாது என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. என்னுடைய தகப்பனார் இறந்து 37 ஆண்டுகள் ஆகிறது என்பது எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி தான் என்னுடைய திருமணத்தையும், 3, 4 பிரதிவாதிகளின் திருமணத்தையும் முன்னின்று செய்து வைத்தார். அதற்கு என்னுடைய தாயார்

நகைகளை கொடுத்து உதவினார். அதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை. என் தாயார் எவ்வளவு நகை வைத்திருந்தார் என்பதை வழக்கில் சொல்லியுள்ளேன். சுமார் 10 1/2 பவுன் நகை இருக்கும். தமிழ்செல்விக்கு என்னுடைய தாயர் சுமார் 3 சவரன் தங்க நகை போட்டு திருமணம் செய்ததாக கேள்விபட்டு தெரிந்துகொண்டேன். சாந்திக்கு அதே அளவு நகை தான் என் தாயார் போட்டார்.

4. எவ்வளவு நகை போட்டு அவர்கள் இருவரும் கணவன் வீட்டிற்கு சென்றார்கள் என்பது எனக்கு தெரியாது. நான் எலட்ரிஷியன் வேலை செய்கிறேன். சுமார் 10 ஆண்டுகளாக அதை செய்கிறேன். அதற்கு முன் 1 பிரதிவாதியிடம் வேலை செய்தேன். 1ம் பிரதிவாதியின் சிமெண்ட் கடையில் வேலை செய்தேன். சம்பளம் இல்லாமல் வேலை செய்தேன். எங்களுடைய மொத்த குடும்பத்தையும் 1ம் பிரதிவாதி தான் என் தகப்பனார் இறந்ததற்கு பின் கவனித்து வந்தார். திருமணம் முடிந்து 2 மாதத்தில் நான் வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டேன்.

5. அதன் பின் 1ம் பிரதிவாதி என்னை கவனிக்கவில்லை. எந்த வருடம் எனக்கு திருமணம் ஆனாது என்று நியாபகம் இல்லை. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்தது. 20 ஆண்டுகளாக நான் தனிகுடித்தனம் இருந்து வருவதற்கு அரசாங்க ஆவணங்கள் உள்ளது. அவ்வாறு ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தெரியவரும். அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 1ம் பிரதிவாதி அவருடைய வீட்டில் இருந்து என்னை காலிசெய்ய வேண்டும் என தனியாக வழக்கு போட்டுள்ளார்.

6. அந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பதிலில் 20 ஆண்டுகளாக

அந்த வீட்டில் குடியிருப்பதாக கூறவில்லை. பிறந்தது முதல் அந்த வீட்டில் இருப்பதாக பதிலில் கூறியுள்ளேன். 1970 ல் நான் பிறந்தேன். அந்த சமயத்தில் சொத்து என் அப்பா பெயரிலும் சேகர் பெயரிலும் இல்லை. 1992 ல் தான் சேகர் கிரையம் வாங்கினார். சரஸ்வதியிடம் ஒப்பந்தம் இருப்பதாக கூறுவதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் சரஸ்வதி யார் என்று எனக்கு தெரியாது. அதை வழக்கறிஞரிடம் சொன்னேன்.

7. 1992 ல் சேகர் வாங்கிய ஆவணத்தில் சாட்சிகளாக யார் கையெழுத்து போட்டுள்ளார் என்பது எனக்கு தெரியாது. எவ்வளவு தொகைக்கு சேகர் அதை வாங்கியுள்ளார் என்பது எனக்கு தெரியாது. உடல்நிலை சரியில்லாமல் இருந்து தான் என் தாயார் இறந்தார். என் தாயாருக்கு மருத்துவ செலவுகளை சேகர் செய்யவில்லை. நான் தான் செய்தேன். அதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. வழக்கு சொத்தில் 2 போஷன்கள் நான் இருக்கும்போது இருந்தது. நான் அதில் கடை கட்டியதற்கு ஆவணங்கள் இல்லை.

8. கட்டிடத்திற்கான சொத்து வரி, மின் கட்டணம் சேகர் பெயரில் உள்ளது. தமிழ்செல்வி, சாந்தி எனக்கு உறுதுணையாக இல்லை. நான் அடாத வழக்கு போட்டுள்ளதால் அவர்கள் எனக்கு சபோட் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு போடுவதற்கு முன் சேகருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். அதற்கு சேகர் கொடுத்த பதிலில் என்ன விவரம் இருந்தது என்பது எனக்கு தெரியாது. என் தாயார் 10 1/2 சவரன் நகை வைத்துள்ளார் என்பதற்கு என்னிடம் ஆதாரம் இல்லை. அதை ஊர் பெரியோர்கள் மூலம் தர்மகர்தாவிடம் ஒப்படைத்துள்ளேன்.

9. அவரை கூப்பிட்டு விசாரித்தால் தான் உண்மை தெரியும். அந்த

விவரத்தை வழக்கில் சொல்லியுள்ளேன். முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் அதை கூறியுள்ளேன். அவ்வாறு குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வங்கியில் 10 1/2 சவரன் நகை இருந்ததாக கூறியிருந்தால் அது தவறு. பஞ்சாயத்திற்கு கூட்டியதற்கு ஆதாரம் இல்லை. அவ்வாறு பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்திற்கு கூப்பிட்டும் சேகர் வரவில்லை. ஊர்காரர்கள் கூப்பிட்டும் சேகர் வரவில்லை. பஞ்சாயத்திற்கு அவர் வந்ததாக கூறியிருந்தால் அது பொய் ஆகும்.

10.நிலத்திற்கு செக்குபந்தி எனக்கு தெரியாது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் வழக்கு சொத்திற்கு சென்றுள்ளேன். அடிக்கடி சொத்திற்கு போய் வருவேன். 1986 லிருந்து இன்றைய தேதிவரை சொத்தில் எந்த பயிரும் செய்யவவில்லை. கூட்டு சுவாதீனத்தில் இருந்ததும் இல்லை. அந்த விவரங்களை வழக்கு போடும்போது வழக்கறிஞரிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. சரியான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தாததால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

11.சேகர் தரப்பில் என்ன பதில் போட்டுள்ளார் என்பது எனக்கு தெரியாது. எனக்கு நிரந்தர வருமானம் இல்லை. அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போய் விடுகிறது. அதனால் தான் பி அட்டவணை சொத்தில் சேகர் என்னை வாடகை இல்லாமல் குடியிருக்க அனுமதித்துள்ளார் என்றால் சரியல்ல. நிலத்தின் மீது எவ்வளவு கடன் உள்ளது என்பது தெரியுமா என்றால் கடன் எதுவும் இல்லை. எவ்வளவு கடன் இருப்பதாக பதில் போட்டுள்ளார் என்பது தெரியாது. எவ்வளவு வட்டி கட்டுகிறார் என்றால் எனக்கு தெரியாது.

12.என்னுடைய வங்கி கணக்கில் சுமார் 10,000/-த்திற்கு மேல் பணம்

இருந்தது இல்லை. என் பெயரில் மதனாஞ்சேரியில் சொத்து உள்ளது. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன் வாங்கினேன். அந்த விவரத்தை வழக்கில் கூறவில்லை. சேகர் தனிபட்ட முறையில் வாங்கிய சொத்தில் நான் எந்த உரிமையும் கேட்கவில்லை. 1992 ல் சேகர் பெயரில் பத்திரம் செய்திருந்தால் நான் வழக்கு போட்டிருக்கமாட்டேன். வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 02/04/2024 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

Sd/B.ராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி
வாணியம்பாடி.